1972 ஆகஸ்ட் 18]

Errors in the Eleventh Standard Geography Text Books

* 33 *Q.*—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that many factual errors are found in the Eleventh Standard Geography Text Books published by the State Government;

(*b*) the reason for the same; and

(*c*) the action proposed to be taken in this matter ?

11-வது வகுப்பு புவியியல் பாடப் புத்தகத்தில் கருத்துப் பிழைகள்

திரு. எம். ராஜா அய்யர் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அரசால் வெளியிடப்பட்ட 11-வது வகுப்பு புவியியல் பாடப் புத்தகத்தில் கருத்துப் பிழைகள் பல உள்ளன என்பது உண்மையா?

(இ) அதற்காக காரணம் என்ன?

(உ) இது குறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) & (உ) 1971-72-ல் அந்நூல் வெளியிடுவதைக் கவனிக்கத் தகுதியான ஆசிரியர்கள் பாடநூல் நிறுவனத்தால் நியமிக்கப்பட்டிருந்தும் அவர்களையும் மீறிச் சில பிழைகள் புகுந்துவிட்டன. பின் பதிப்புகளில் பிழை திருத்தச் சீட்டுகள் அச்சிடப்பட்டு ஒட்டப்பட்டு உள்ளன.

THIRU M. RAJAH IYER : May I know, Sir, whether the Government would consider Geography to be a Science subject instead of a subject in Humanities as is being done in the Western countries? Would the Government consider the possibility of entrusting the writing of Geography books to the experts in the held ? May I know, Sir, whether the Government would continue to tag on Geography with History instead of teaching Geography as a Science subject and not as a subject in Humanities?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த வரலாறு, புவியியல் பாடங்கள் தனித்தனியாகச் சொல்லிக்கொடுக்கப்பட வேண்டும் என்ற முறை இருப்பதற்கு இணங்க, தனித்தனியாக பாடநூல்களாகக் கொண்டுவரப் பட்டுள்ளன. ஏற்கெனவே எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்துக் கொண்டுவரும் சூழ்நிலை இருந்தது. தனித்தனியாகச் சொல்லிக் கொடுப்பதுதான் நல்லது என்று இந்தப் பாட நூல்கள் வகுக்கப் பட்டிருக்கின்றன.

THIRU A. R. DAMODARAN: May I know if there is any separate Board of Studies for writing these books in Geography for the school standard or whether it is entrusted to individual teachers?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதற்காக வல்லுனர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு. அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பரிசீலித்து, அதற்குப் பிறகு வெளியிடுகிருர்கள்.

THIRU A. R. DAMODARAN: May I know what the Board was doing when these factual errors were written into the text-books?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பிறகு அது எந்த அளவிலே வந்தது என்று இந்த நூலைப் பொறுத்த அளவிலே ஆராய்ந்ததற்குப் பிறகு தவறுகள்—11, 12 தவறுகள்—கண்டுபிடிக்கப்பட்டு, தனியாகத் திருத்தப் பட்டுள்ளன.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, இந்தப் பிழைகள் எல்லாம் அச்சில் ஏற்பட்ட பிழையா அல்லது கருத்துப் பிழையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கொள்கை அளவில் சில பிழைகள் ஏற்பட்டிருக் கின்றன. சேர்க்காத சில மாநிலங்களைச் சேர்த்திருக்கிருர்கள். சில மாநிலங்கள் விடுபட்டிருக்கின்றன. அந்த வகையிலேதான் 'அடிஷன்ஸ் அன்டு சப்-டிரேக்ஷன்ஸ்' என்ற அளவுக்கு வந்திருக் கின்றன.

THIRU G. VASANTHA PAI: Sir, in view of the fact that a lot of mistakes are creeping into text books, will the Government take

precaution and see that mistakes do not creep in especially in view of tne High Court's stricture on an English book written some time back " whether this book would at least teach the pupil how English ought not to be written "?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே எந்த வகையில் அந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டது, எந்த வழக்கைப் பொறுத்தது என்று இப்போது சொல்வதற்கில்லை. இதற்கெல்லாம் தனியாகக் குழு அமைக்கப்பட்டு ஆராய்ந்து எழுதியதற்குப் பிறகு, மானஸ்க்ரிப்டை சரிபார்த்து, அதன் பிறகுதான் அச்சடிக் கப்படுகின்றன. அந்த முறையிலேதான் பாடப் புத்தகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU G. VASANTHA PAI : Nearly 360 mistakes had crept in in one text-book written by one lady and the High Court had commented on it, which I would like to bring to the notice of the Government. The High Court commented that ' at least this book would teach pupils how English ought not to be written '.

MR. CHAIRMAN : It is pardonable because it has been written by a lady. (Laughter).

THIRU M. RAJAH IYER : Inasmuch as the lady wrote the book, whose name has been dragged in.........

THIRU G. VASANTHA PAI : The name was not dragged in.

THIRU M. RAJAH IYER : May I know whether the Government would completely exonerate the authoress since some errors in printing might have crept in, for which the author of the book is not at all responsible, Sir?

திரு. கே எஸ் அப்துல் வகாப் : தலைவரவர்களே, இந்தப் பாடப்புத்தகத்தில் வந்த பிழைகள் எப்போது கண்டுபிடிக்கப் பட்டன, புத்தகங்கள் வினியோகிக்கப்பட்ட பிறகா அல்லது வினியோகிக்கப்படுவதற்கு முன்பா, மொத்தம் அச்சிடப்பட்ட புத்தகங்கள் எத்தனை, திருத்தப்பட்ட புத்தகங்கள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பதிப்பிக்கப்பட்ட பிறகு தான் அந்தப் பிழைகள் கண்டுபிடிக்கப் பட்டன. சில இடங்களில் 80.17 என்று இருக்கவேண்டியது 80½ என்று இருந்தது. இப்படிப்பட்ட பிழைகள் திருத்தப்பட்டிருக் கின்றன. சில இடங்களில் சில மாநிலங்கள் கூட சேர்க்கப் பட்டிருந்தன ; அவைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. புத்தகங்கள் வெளியிடப்பட்ட பிறகு கண்டுபிடிக்கப்பட்ட அந்தப் பிழைகளைப் பொறுத்தவரையில், பிழைத் திருத்தங்கள் அச்சிடப்பட்டு எல்லா நூல்களிலேயும் ஒட்டப்பட்டிருக்கின்றன.

Abolition of Examinations up to Fifth Standard

* 34 *Q.*—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to abolish examinations up to Fifth Standard ;

(*b*) if so, the nature of the scheme to be introduced ; and

(*c*) the period from when the new scheme is expected to come into operation ?

ஐந்தாம் வகுப்பு வரை தேர்வுகளை ரத்து செய்தல்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐந்தாம் வகுப்பு வரையில் தேர்வுகளை ரத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், கொண்டுவரவிருக்கும் புதிய திட்டத்தின் விவரமென்ன ?

(உ) இப்புதிய திட்டம் எப்போதிருந்து செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.